அரச நிறுவனங்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களின் நிதி கட்டுப்பாடு மற்றும் செயலாற்றுகை பற்றிய கணனி தகவல்கள் முகாமைத்துவ அமைப்பு மூலம் என மதிப்பீடு 2017 ஆம் நிதியாண்டு

நிறுவனத்தின் பெயர் மற்றும் தலைப்பு	2017 ஆம் கணக்கு ஆண்டில் இனங்காணப்பட்ட பலவீனங்கள்	அப்பலவீனங்களை தடுத்துக்கொள்வதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் தற்போதைய நிலை
நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சு 110	1. நிலையான சொத்துக்கள் இடாப்பு நாளதுவரை பேணப்பட்டிருக்கவில்லை	2017.12.31 ஆம் திகதிக்கு நிலையான சொத்துக்கள் இடாப்பு, நாளதுவரை சீராக்காததுடன் தற்போதைக்கு நிலையான சொத்துக்கள் இடாப்பின் தரவுகள் உள்ளடக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. ஏதிர்காலத்தில் நிலையான சொத்துக்கள் இடாப்பு உரியவாறு நாளதுவரை சீராக்கல் பட்டு பேணுவதற்கு தொடர்புடைய அலுவலர்களுக்கு ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளன.
	2. சேதங்கள் பற்றிய இடாப்பு நாளதுவரை பேணப்படாமை	2017.12.31 ஆம் திகதிக்கு சேதங்கள் பற்றிய இடாப்பு, நாளதுவரையாக்கப்படாததுடன் தற்போதைக்கு சேதங்கள் பற்றிய இடாப்பு நாளதுவரையாக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. அவ்வாறே எதிர்காலத்தில் சேதங்கள் பற்றிய இடாப்பை உரியவாறு நாளதுவரை சீராக்கப்பட்டு பேணிச் செல்வதற்கு தொடர்புடைய அலுவலர்களுக்கு ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளன.
	3. கணக்காய்வாளர் தலைமையதிபதியினால் சமர்பிக்கப்பட்டிருந்த சகல கணக்காய்வு விசாரணைகளுக்காகவும் மாதமொன்றுக்குள் பதில்கள் வழங்கப்படாமை	எதிர்காலத்தில் தாமதமின்றி பதில்கள் அனுப்புவதற்கான நடவடிக்கைகள் எடுக்குமாறு தொடர்புடைய அலுவலர்களுக்கு ஆலொசனைகள் வழங்கப்பட்டுள்ளன.

	4. கணக்காய்வு முகாமைத்துவக் குழுக் குறைந்த பட்சம் 03 கூட்ட அமர்வுகளையாவது நடாத்தப்படாமை.	2017 ஆம் ஆண்டு யூன் மாதம் வரையில் அமைச்சின் பிரதான உள்ளக கணக்காய்வாளர் பதவி வெற்றிடமாகவுள்ளதால் கணக்காய்வு முகாமைத்துவக் குழுக் கூட்டம் உரியவாறு நடாத்த முடியாதிருந்தது 2018 ஆம் ஆண்டில் கண்க்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டங்கள் 03 நடாத்தியுள்ளது 2019 ஆம் ஆண்டிலிருந்து உரியவாறு காலாண்டொன்றுக்கு ஒருமுறை கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ கூட்டங்கள் நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.
	5. மீளாய்வு ஆண்டிற்காக உரிய திகதியில் மதிப்பீடு செய்யப்பட்டு தொடர்புடைய அறிக்கைகள் கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு சமர்பிக்கப்பட்டிருக்கவில்லை. வருடாந்த மதிப்பீட்டின் மூலம் தெரிவந்துள்ள மேன் மிகைகள், குறைபாடுகள் பற்றிய விதப்புரைகள் மற்றும் ஏனைய விதப்புரைகள் உரிய கால கட்டத்திற்குள் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.	2017 ஆம் ஆண்டு தொடர்பான மதிப்பீடு செய்யப்பட்டு 2018.06.24ஆம் திகதியாகும் போது விதப்புரைகள் செயற்படுத்தி முடிக்கப்பட்டுள்ளன. அதே போல் தற்போதைக்கும் 2018ஆம் ஆண்டு தொடர்பிலான மதிப்பீடு செய்யப்பட்டு அது தொடர்விலான விதப்புரைகளை செயற்படுத்துவதற்காக தேவையான அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளதுடன் பழுதடைந்த பொருட்களை ஏலத்தில் விட வேண்டியுள்ளது. அவ்வாறாயினும் எதிர் காலத்தில் உரிய காலவரைக்குள் மதிப்பீட்டு நடவடிக்கள் முடிவுறுத்துவதற்கு தொடர்புடைய அலுவலர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.
	6. தொகுதியின் வாகனங்களுக்கென நாளாந்த ஓட்டக்குறிப்புக்கள் மற்றும் மாதாந்த பொழிப்பு அறிக்கைகள் கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு சமர்பிக்கப்படாமை சகல வாகனங்களுக்காகவும் லொக் புத்தகங்கள் நாளதுவனர சீராக்கல் அடிப்படையில் பேணப்படாமை	எதிர்காலத்தில் உரியவாறு தொகுதி வாகனங்களுக்காக நாளாந்த ஓட்டல் குறிப்புக்கள் மற்றும் மாதாந்த பொழிப்பு அறிக்கைகளை கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு சமர்பிக்குமாறு தொடர்புடைய அலுவலர்களை அறிவுறுத்தப்பட்டுள்ளதுடன் தறபோதைக்கு வாகனங்களின் லொக் புத்தகங்கள் நாளதுவரை சீராக்கப்பட்டுள்ளன.

	7. வங்கி இணக்கக் கூற்றுகளிலிருந்து தெரியவந்துள்ள சீராக்கப்பட வேண்டியிருந்த மீதிகள் சம்பந்தமாக நி.பி. பிரகாரம் ஒரு மாதத்திற்குள் தீர்க்கப்படாமை	2017 ஆம் ஆண்டு தொடர்பான வங்கி இணக்க கூற்றுக்களின் சீராக்கல் செய்யப்பட வேண்டிய மீதிகள் 2018.02.28 ஆம் திகதியாகும் போது தீர்க்கப்பட்டுளளதுடன் தற்போதைக்கு வங்கி இணக்க கூற்றுக்கள்படி எழுகின்ற சீராக்கப்பட வேண்டிய மீதிகள் சம்பந்தமாக தொடர்புடைய மாதத்திற்குள்ளேயே சீர்செய்வதற்கான நடவவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.
	8. அங்கீகரிக்கப்பட்ட எல்லைகள் விஞ்சி கடப்பாடுகள் ஏற்படுத்திக் கொண்டிருந்தன	திறைச்சேரியிலிருந்து உரியவாறு கட்டுப்பணங்கள் கிடைக்காத காரணத்தினால் முன்னைய ஆண்டில் செலுத்த முடியாதிருந்த பட்டியல்களுக்காக மீளாண்டு ஆண்டின் ஏற்பாடுகளை பயன்படுத்திக் கொண்டு செலுத்துதல்கள் செய்ய ஏற்பட்டது ஆகவே நடப்பாண்டில் மதிப்பீடு செய்யப்பட்ட செலவுகள் தொடர்பிலான வவுச்சர்களை கடப்பாடுகளாக காட்டப்பட வேண்டியேற்பட்டுள்ளது.
	9. ஓராண்டிற்கு மேலாக நிலவுகின்ற நிலுவை கடன் மீதிகள் இருந்தன	2017.12.31 ஆம் திகதிக்கு ஓராண்டிற்கு மேலான காலத்தை விஞ்சியிருந்த 829,644.33 ரூபா கடன் மீதிகளலிருந்து 107,606.33 ரூபாத் தொகையொன்றை அறவீடு செய்யப்பட்டுள்ளதுடன் 10,250.00 ரூபாத் தொகையொன்று வெட்டப்பட்டுள்ளது. அத்துடன் அறவிடமுடியாத கடன் தொகைகளை வெட்டிவிடுவதற்காக அரச நிதித் திணைக்களத்தின் அங்கீகாரத்திற்காக சமர்பிக்கப்பட்டுள்ளது. மேலும் அறவிடப்பட வேண்டிய மிகுதி கடன் மீதிகளை அறவீடு செய்து கொள்வதற்காக எதிர் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன.
	10. அங்கீகரிக்கப்பட்ட எல்லையை விஞ்சி பணியாட்டொகுதி ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டிருந்தது	2017.12.31 ஆம் திகதிக்கு அங்கீகரிக்கப்பட்ட எல்லை விஞ்சப்பட்டிருந்த மேன்மிகையான பணியாட்டொகுதி முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் "DMS/0002(T)" ஆம் இலக்க 2018.09.27 ஆம் திகதிய கடிதம் மூலம் 2018 ஆம் ஆண்டில் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

நீதிமன்ற நிருவாகத் திணைக்களம் 228	1. நிலையான சொத்துக்கள் இடாப்பு நாளதுவரை சீராக்கப்பட்டு பேணப்படவில்லை. குணனி உதிரிப்பாகங்கள் மற்றும் மென்கலங்கள் பற்றிய நிலையான சொத்துக்கள் இடாப்பு நாளதுவரை சீராக்கப்படாமை.	2017.12.31 ஆம் திகதிக்கு நிலையான சொத்துக்கள் இடாப்பு, கணனி உதிரிப்பாகங்கள் மற்றும் மென்கலங்கள் தொடர்பான நிலையான சொத்துக்கள் இடாப்பு நாளதுவரை சீராக்கப்பட்டிருக்காததுடன் தற்போதைக்கு நிலையான சொத்துக்கள் இடாப்பு மற்றும் கணனி உதிரிப்பாகங்கள் மற்றும் மென்கலங்கள் தொடர்பான நிலையான சொத்துக்கள் இடாப்பிற்கு தரவுகள் உள்ளடக்கப்பட்டக் கொண்டிருகின்றன. மேலும் எதிர்காலத்தில் இவ்விடாப்புக்கள் உரியவாறு நாளதுவரை சீராக்கப்பட்டு பேணிச் செல்வதற்கு தொடர்புடைய அலுவலர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.
	2. கணக்காய்வாளர் தலைமையதிபதியினால் சமர்பிக்கப்பட்டிருந்த சகல கணக்காய்வு விசாரணைகளுக்காகவும் ஒரு மாதத்திற்குள் பதில் வழங்கப்படாமை	எதிர்காலத்தில் தாமதமின்றி பதில்கள் அனுப்புவதற்கான நடவடிக்கைகள் எடுக்குமாறு தொடர்புடைய அலுவலர்களுக்கு ஆலொசனைகள் வழங்கப்பட்டுள்ளன.
	3. உள்ளகக் கணக்காய்வு விசாரணைகளுக்காக ஒரு மாதத்திற்குள் பதில் அனுப்பப்பட்ட சந்தர்ப்பங்கள் அறிக்கையிடப்பட்டுள்ளன.	தற்போதைக்கு கிடைத்துள்ள சகல உள்ளக கணக்காய்வு விசாரணைகளுக்காகவும் பதில்கள் வழங்கப்பட்டுள்ளதுடன் உள்ளககணக்காய்வு விசாரணைகளுக்கு தாமதமின்றி பதில்கள் அனுப்புவதற்காக அலுவலர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.
	4. கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் குறைந்த பட்சம் 03 கூட்ட அமர்வுகளையாவது நடாத்தியிருக்கவில்லை	2017 ஆம் ஆண்டு யூன் மாதம் வரையில் அமைச்சின் பிரதான உள்ளக கணக்காய்வாளர் பதவி வெற்றிடமாகவுள்ளதால் கணக்காய்வு முகாமைத்துவக் குழுக் கூட்டம் உரியவாறு நடாத்த முடியாதிருந்தது 2018 ஆம் ஆண்டில் கண்க்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டங்கள் 03 நடாத்தியுள்ளது 2019 ஆம் ஆண்டிலிருந்து உரியவாறு காலாண்டுக்கு ஒரு தடவை கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டங்களை நடாத்த திட்டமிடப்பட்டுள்ளன.

	5. மீளாய்வு ஆண்டிற்காக உரிய திகதியில் மதிப்பீடு செய்யப்பட்டு கணக்காய்வு தலைமையதிபதிக்கு அறிக்கை சமர்பிக்கப்பட்டிருக்கவில்லை. வருடாந்த மதிப்பீடு மூலம் தெரியவந்துள்ள மேன் மிகைகள், குறைப்பாடுகள் தொடர்பான விதப்புரைகளும் ஏனைய விதப்புரைகளும் உரிய காலகட்டத்திற்குள் செயற்படுத்தப்பட்டிக்கவில்லை.	2017 ஆம் ஆண்டு தொடர்பான மதிப்பீடு செய்யப்பட்டு 2018.12.28 ஆம் ஆண்டு ஆகும் போது குறித்த விதப்புரைகள் செயற்படுத்தி முடிக்கப்பட்டிருந்தன. தீவு முழுவதிலுள்ள நீதிமன்றங்களில் வெவ்வேறான முறையில் மதிப்பீடுகள் செய்யப்படுவதுடன் உரிய காலவரையறைக்குள் மதிபபீட்டு நடவடிக்கைகள் செய்யப்பட்டு விதப்புரைகளை செயற்படுத்தும் போது தாமதம் ஏற்பட்டுள்ளது. தற்போதைக்கு 2018 ஆம் ஆண்டு தொடர்பான மதிப்பீடுக்கு செய்யப்பட்டு அறிக்கைகளுக்கு அங்கீகாரம் கிடைத்துள்ளதுடன் சில நீதிமன்றங்களில் மாத்திரம் பழுதான பொருட்களை ஏலத்தில் விடவுள்ளன. எவ்வாறாயினும் எதிர்காலத்தில் குறிப்பிட்ட காலவரையறைக்குள் மதிப்பீடு செய்து முடிவுறுத்துவதற்காக சகல முயற்சிகளையும் எடுக்குமாறு தொடர்புடைய அலுவலர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளன.
	6. தொகுதி வாகனங்களுக்கான நாளாந்த ஓட்டல் குறிப்பு மற்றும் மாதாந்த பொழிப்பு அறிக்கைகள் கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு சமர்பிக்கப்பட்டிருக்கவில்லை சகல வாகனங்களுக்காகவும் லொக் புத்தகங்கள் நாளதுவரை சீராக்கல் அடிப்படையில் பேணப்பட்டிருக்கவில்லை.	எதிர்காலத்தில் உரியவாறு தொகுதி வாகனங்களுக்காக நாளாந்த ஓட்டல் குறிப்புக்கள் மற்றும் மாதாந்த பொழிப்பு அறிக்கைகளை கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு சமர்பிக்குமாறு தொடர்புடைய அலுவலர்களை அறிவுறுத்தப்பட்டுள்ளதுடன் தறபோதைக்கு வாகனங்களின் லொக் புத்தகங்கள் நாளதுவரை சீராக்கப்பட்டுள்ள
	7. வங்கி இணக்கக் கூற்றுக்களிலிருந்து தெரியவந்துள்ள சீராக்கல் செய்யப்படவேண்டியிருந்த மீதிகள் சம்பந்தமாக நி.பி. பிரகாரம் மாதமொன்றுக்குள் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.	2017 ஆம் ஆண்டு தொடர்பாக வங்கி இணக்கக்கூற்றில் சீராக்கப்பட வேண்டியிருந்த மீதிகள் தீர்க்கப்பட்டிருந்ததுடன் தற்போதைக்கும் வங்கி இணக்ககூற்றுக்கள் ஊடாக ஏற்படுகின்ற சீராக்கப்பட வேண்டிய மீதிகள் சம்பந்தமாக தொடர்புடைய மாதத்திற்குள்ளே சீர்செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

	8. அங்கீகரிக்கப்பட்ட எல்லைகள் விஞ்சி கடப்பாடுகள் ஏற்படுத்திக் கொள்ளப்பட்டிருந்தன.	திறைச்சேரியிலிருந்து உரியவாறு கட்டுப்பணங்கள் கிடைக்காத காரணத்தினால் முன்னைய ஆண்டில் செலுத்த முடியாதிருந்த பட்டியல்களுக்காக மீளாண்டு ஆண்டின் ஏற்பாடுகளை பயன்படுத்திக் கொண்டு செலுத்துதல்கள் செய்ய ஏற்பட்டது ஆகவே நடப்பாண்டில் மதிப்பீடு செய்யப்பட்ட செலவுகள் தொடர்பிலான வவுச்சர்களை கடப்பாடுகளாக காட்ட வேண்டியுள்ளது.
	9. ஓராண்டு காலத்திற்கு மேலாக நிலகின்ற நிலுவை கடன் மீதிகள் இருந்தன.	2017 ஆம் திகதியில் ஓராண்டிற்கு மேலான காலத்தை விஞ்சியிருந்த 14,657,549.61 ரூபா கடன் தொகையிலிருந்து 4,420,308.55 ரூபாத் தொகையொன்றை அறவிடப்பட்டிருப்பதுடன் 39,622.87 ரூபாத் தொகையொன்று வெட்டப்படடுள்ளது. ஆவ்வாறே அறவீடு செய்ய முடியாத கடன் தொகைகளை வெட்டி விடுவதற்காக அரச நிதி திணைக்களத்திற்கு அங்கீகாரம் பெற்றுக்கொள்வதற்கு ஆற்றுப்படுத்தப்பட்டுள்ளது. மேலும் அறவிடப்பட வேண்டிய மிகுதி கடன் மீதிகளை அறவீடு செய்து கொள்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுக்கொண்டிருக்கின்றன.

	10. பொது வைப்புக் கணக்கின் காலாவதியான வைப்புக்கள் தொடர்பாக நி.பி. 571 பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை	பொது வைப்புக் கணக்கில் காலாவதியான வைப்புக்களாக இருந்தது. நிர்மாண வேலைகளுக்குத் தொடர்புடையதான ஒப்பந்தக்காரர்களின் தடுத்துவைக்கப்பட்டிருந்த பணம் மற்றும் வழக்கு நடவடிக்கைகளுக்குத் தொடர்புடையதான பிணை வைப்புக்களாகும் 02 வருடத்திற்கு மேலான காலமாக செயல்படகின்ற நிர்மாண வேலைகளுக்குத் தொடர்புடையதான தடுத்து வைக்கப்பட்ட பணத்தை தொடர்புடைய நிர்மாண வேலைகள் முடிவுறும் வரையில் தடுத்து வைத்துக் கொள்ள வேண்டியிருப்பதால் அவ்வைப்புக் கணக்கில் தடுத்து வைத்துக்கொள்ள வேண்டியுள்ளது. அவ்வாறே வெளிநாட்டு அழைப்பாணைகள் சம்பந்தமான வைப்பு மீதிகளுக்கு நீதிமன்ற கட்டளையொன்று பிறப்பிக்கப்படும் வரையில் தடுத்து வைத்துக் கொள்ள வேண்டியேற்படும். இவ்விடயங்களைத் தவிரவும் விடுவிக்க முடியுமான சகல வைப்பு மீதிகளை உரிய காலத்திற்குள் விடுவிப்பதற்காக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.
சட்டமா அதிபர் திணைக்களம் 229	1. நிலையான சொத்துக்கள் இடாப்பு நாளதுவரை பேணப்பட்டிருக்கவில்லை	நிலையான சொத்துக்கள் இடாப்பு நாளதுவரை சீராக்கப்பட்டு பேணப்படுகின்றது.
	2. நிதிப் பிரமாணம் 135 படி தாபனத்திற்குள் நிதி அதிகாரம் சாட்டுதலொன்று செய்யப்பட்டிருக்கவில்லை. நிதி அதிகாரம் சாட்டுதலை தாபனத்திற்குள்தேவையான அளவிற்கு அறியச் செய்யப்பட்டிருக்கவில்லை	நிதிப்பிரமாணம் 135 படி நிதி அதிகாரம் சாட்டுதல் செய்யப்பட்டு தாபனத்திற்குள் தொலைதொடர்ப்புச் செய்யப்பட்டுள்ளது.
	3. வருடாந்த செயற்படாட்டுத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.	எதிர்காலத்தில் வருடாந்த செயற்பாட்டுத்திட்டம் உரிய திகதிக்கு முன்னர் தயாரிக்கப்பட்டு சமர்பிக்குமாறு அலுவலர்களுக்கு ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளன.

4. கணக்காய்வு தலைமையதிபதியினால் சமர்பிக்கப்பட்டிருந்த சகல கணக்காய்வு விசாரணைக்காகவும் மாதமொன்றுக்குள் பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை	2017 ஆம் ஆண்டு தொடர்பான 02 கணக்காய்வு விசாரணைகளுக்கு பதில் வழங்க தாமதமானதுடன் 2018.01.12 ஆம் திகதியாகும் போது 2017 ஆம் ஆண்டு தொடர்பான சகல கணக்காய்வு விசாரணைகளுக்காகவும் பதில்கள் வழங்கப்பட்டுள்ளன. எவ்வாறாயினும் எதிர்காலத்தில் தாமதமின்றி பதில் அனுப்புவதற்கு நடவடிக்கைகளை எடுக்குமாறு தொடர்புடைய அலுவலர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.
5. கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு குறைந்த பட்சம் 03 கூட்ட அமர்வுகளையாவது நடாத்தியிருக்கவில்லை.	இத் திணைக்களத்தினால் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டங்கள் நடாத்தப்படாததுடன் நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சினால் நடாத்தப்பட்ட கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ கூட்டங்களில் பங்குபற்றியுள்ளனர். தற்போதைக்கு இத்திணைக்களத்திற்கு உள்ளகக் கணக்காய்வாளர் ஒருவர் நியமிக்கப்பட்டிருப்பதால் எதிர்காலத்தில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டங்கள் நடாத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன.
6. மீளாய்வு ஆண்டுக்காக உரிய திகதியில் மதிப்பீடு செய்யப்பட்டு தொடர்புடைய அறிக்கைகளை கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு சமர்பிக்கப்பட்டிருக்கவில்லை. வருடாந்த மதிப்பீட்டிலிருந்து தெரியவந்துள்ள மேன் மிகைகள், குறைபாடுகள் பற்றிய விதப்புரைகளும் ஏனைய விதப்புரைகளும் உரிய காலகட்டத்திற்குள் செயற்படுத்தப்பட்டிருக்கிவில்லை.	2017 ஆம் ஆண்டு நடவடிக்கைகள் செய்யப்பட்டதுடன் மேல நீதிமன்றத்திற்கு உள்ளீர்ப்புச் செய்யப்பட்டுள்ள அரச சட்டத்தரணி உத்தியோக்பூர்வ அறைகளில் மதிப்பீடுகள் செய்ய முடியாதிருந்த காரணமாக அவ்வறிக்கையை தயாரிக்க முடியவில்லை. 2018 ஆம் ஆண்டு தொடர்பிலான மதிப்பீட்டு நடவடிக்கைகள் முடிவுறுத்தப்பட்டுள்ளதுடன் உள்ளீர்ப்புச் செய்யப்பட்டுள்ள அரச சட்டத்தரணிகளின் உத்தியோகப்பூர்வ அறைகளில் அப்புறப்படுத்தல் வேலைகள் செய்யப்படுகின்றன.

	7. ஓராண்டுக் காலத்திற்கு மேலாக நிலவிவருகின்ற நிலுவை கடன் மீதிகள் இருந்தன	2017 ஆம் ஆண்டில் வேலை இடைநிறுத்தம் செய்த அலுவலர்களிடமிருந்து அறவிடப்படவிருந்த கடன் மீதிகள் 251,560.00 ரூபாத் தொகையென்பதுடன் அத் தொகையில் 115,040.00 ரூபாவின் கடன் தொகையொன்று 2018 திசெம்பர் மாதத்திலிருந்து தவணைகளாக அறவிடப்படுகிறது. சேவையை விட்டுச்சென்ற அலுவலர்களின் கடன் நிலுவையான 1,325,757.00 ரூபாவான கடன் தொகையிலிருந்து 743,315.00 ரூபாவான கடன் தொகையொன்றை அறவீடு செய்து கொள்வதற்காக 2018 ஆம் ஆண்டில் வழக்குத் தொடுப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. 10,000.00 குறைவான கடன் மீதிகளை வெட்டிவிடுவதற்காக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது.
	8. மீளாய்வு ஆண்டிற்காக பாராளுமன்றத்திற்கு சமர்பிக்கப்பட வேண்டிய செயலாற்று அறிக்கை உரிய தினத்தில் சமர்பிக்கப்பட்டிருக்கவில்லை	2017 ஆம் ஆண்டிற்கான செயலாற்று அறிக்கை 2019 மார்ச் மாதத்தில் பாராளுமன்றத்தில் சமர்பிக்கப்பட்டுள்ளது.
சட்ட வரைநர் திணைக்களம் 230	1. கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு குறைந்த பட்சம் 03 கூட்ட அமர்வுகளையாவது நடாதியிருக்கவில்லை	இத் திணைக்களத்தின் மூலம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டங்கள் நடாத்தபடாததுடன் நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சினால் நடாத்தப்படுகின்ற சகல கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டங்களிலும் பங்குபற்றியுள்ளது.
	2. தொகுதி வாகனங்களுக்காக நாளாந்த ஓட்டல் குறிப்பு மற்றும் மாதாந்த பொழிப்பு அறிக்கைகள் கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு சமர்பிக்கப்பட்டிருக்கவில்லை. சகல வாகனங்களுக்காகவும் லொக் புத்தகங்கள் நாளதுவரை அடிப்படையில் பேணப்பட்டிருக்கவில்லை.	2019ஆம் ஆண்டிலிருந்து தொகுதி வாகனங்களின் ஓட்டல் குறிப்புக்கள் மற்றும் மாதாந்த பொழிப்பு அறிக்கைகள் கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு சமர்பிக்கப்பட்டுள்ளதுடன் வாகனங்களின் லொக் புத்தகங்கள் நாளதுவரை சீராக்கப்பட்டள்ளன. 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் உரிய திகதியில் செயலாற்று அறிக்கை சமர்பிக்க முடியாதிருப்பினும்
	3. மீளாய்வு ஆண்டிற்காக பாராளுமன்றத்திற்கு சமர்பிக்கப்பட வேண்டிய செயலாற்று அறிக்கைகள் உரிய திகதியில் சமர்பிக்கப்பட்டிருக்கவில்லை.	2019 ஆண்டிலிருந்து உரிய காலகட்டத்திற்குள் செயலாற்று அறிக்கையை பாராளுமன்றத்தில் சமர்பிப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

சிறைச்சாலைகள் திணைக்களம் 232	1. கணனி உதிரிப்பாகங்கள் மற்றும் மென்கலங்கள் பற்றிய நிலையான சொத்துக்கள் இடாப்பொன்று நாளதுவரையில் பேணப்படவில்லை.	2017.12.31 ஆம் திகதிக்கு நிலையான சொத்துக்கள் இடாப்பிற்கு தேவையான தகவல்கள் தீவுமுழுவதிலுமுள்ள ஏனைய சிறைச்சாலைகள் நிறுவனங்களிடமிருந்து வரவழைத்துக் கொள்வதற்கு தாமதமான காரணமாக நாளதுவரை சீராக்கப்பட்டு முடித்துக் கொள்ள முடியாது போனதுடன் தற்போது நிலையான சொத்துக்கள் இடாப்பு நாளதுவரை சீராக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது.
	2. கணக்காய்வாளர் தலைமையதிபதியினால் சமர்பிக்கப்பட்டிருந்த சகல கணக்காய்வு விசாரணைகளுக்காகவும் ஒரு மாதத்திற்குள் பதிலளிக்கப்படாமை	கணக்காய்வு விசாரணைக்காக பதிலளிப்பதற்கு தலைமையலுவலகத்தில் பிரிவுகள் மற்றும் சிறைச்சாலைகள் 29 நிறுவனங்கள் மூலம் பதில்கள் அழைக்கப்பட்டு பின்னர் பதில்கள் தயாரிக்கப்படும் அப்போது பிரிவுகள் மற்றும் சிறைச்சாலைகள் நிறுவனங்கள் மூலம் பெற்றுக் கொடுக்கப்படுகின்ற பதில்கள போதுமானதாகாத சந்தர்ப்பங்களில் மீண்டும் மீண்டும் விசாரிக்கப்பட்டு பதில் தயாரிக்கப்பட வேண்டியிருப்பதால் கணக்காய்வு விசாரணைகளுக்காக பதில்கள் பெற்றுக்கொடுப்பதில் தாமதமொன்று ஏற்பட்டுள்ளது. எவ்வாறாயினும் எதிர்காலத்தில் தாமதமின்றி பதில்களை அனுப்புவதற்கான நடவடிக்கைகள் எடுக்கமாற தொடர்புடைய அலுவலர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.
	3. வருடாந்த மதிப்பீட்டின் மூலம் தெரியவந்துள்ள மேன் மிகைகள் குறைபாடுகள் பற்றிய விதப்புரைகளும் ஏனைய விதப்புரைகளும் குறிப்பிட்ட காலகட்டத்திற்குள் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை	2017 ஆம் ஆண்டு தொடர்பான மதிப்பீட்டிலிருந்து தெரியவந்துள்ள விதப்புரைகள் 2018.12..31 திகதியாகும் போது செயற்படுத்தி முடிவுறுத்தப்பட்டிருப்பதுடன் எதிர்காலத்தில் உரிய காலகட்டத்திற்குள் மதிப்பீட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு விதப்பரைகளை செயற்படுத்துவதற்கான நடவடிக்கைள் எடுக்குமாறு தொடர்புடைய அலுவலர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

	4. அங்கீகரிக்கப்பட்ட எல்லைகள் விஞ்சப்பட்டு கடப்பாடுகள் ஏற்படுத்திக் கொள்ளப்பட்டிருந்தன.	திறைச்சேரியிலிருந்து கட்டுப்பணங்கள் கிடைக்காத காரணமாக முன்னைய ஆண்டுகளில் செலுத்த முடியாதிருந்த பட்டியல்களுக்காக மீளாய்வு ஆண்டின் ஏற்பாடுகளை பயன்படுத்திக் கொண்டு செலுத்துதல்கள் செய்ய வேண்டியேற்பட்டது. ஆகவே நடப்பாண்டில் மதிப்பீடு செய்யப்பட்ட செலவுகள் தொடர்பான வவுச்சர்களை கடப்பாடுகளாக எடுத்துக்காட்ட வேண்டியேற்பட்டுள்ளது.
	5.ஓராண்டு காலத்திற்கு மேலாக நிலவிவருகின்ற நிலுவை கடன் மீதிகள் இருந்தன	2017.12.31 ஆம் திகதிக்கு ஓராண்டு காலத்தை விஞ்சியிருந்த கடன் மீதிகளை அறவீடு செய்து கொள்வதற்காக தேவையான எதிர் நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு தீவு முழுவதிலுமுள்ள சிறைச்சாலைகள் நிறுவனங்களை அறியச் செய்யப்பட்டுள்ளன.
	6. பொது வைப்புக் கணக்கில் காலாவதியான வைப்புக்கள் சம்பந்தமாக நி.பி. 571 பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்படடிருக்கவில்லை	பொது வைப்புக் கணக்கின் கலாவதியான வைப்புக்களாக நிலவுகின்ற 02 வருட காலத்திற்கு மேல் செயற்படுகின்ற நிர்மாண வேலைகள் தொடர்பிலான ஒப்பந்தக்காரர்களின் தடுத்துவைத்தல் பணங்களாவதுடன் தொடர்புடைய நிர்மாண வேலைகள் முடிவுறுத்தப்படும் வரையில் தடுத்து வைத்துக் கொள்ளப்படுவதால் 02 வருடத்திற்குள் விடுவிக்க முடியாதுள்ளது. அவ்வாறே அலுவலர்களின் சம்பளத்திலிருந்து அறவீடு செய்யப்பட்டு வைப்புச் செய்யப்பட்டுள்ள பிணைகள் தொடர்பிலான தொகைகளை வைப்புக் கணக்குகள் ஆரம்பித்து உடனடியாக வங்கியில் வைப்புச் செய்வதற்கும், நிலவும் கேள்வி வைப்புக்களை உடனடியாக தொடர்புடைய கேள்வியாளர்களுக்கு விடுவிப்பதற்கு அல்லது அரச வருமானத்தில் வரவு வைப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்குமாறு தொடர்புடைய அலுவலர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

	7. மீளாய்வு ஆண்டு இறுதியில் காசேட்டில் நிலவிய மீதி தொடர்புடைய சுற்றறிக்கை ஏற்பாடுகளின்படி தொழிற்பாடு திணைக்களத்திற்கு உரியவாறு அனுப்பப்பட்டிருக்கவில்லை.	தீர்ப்பதற்காக காசேட்டில் மீதிகளாக இருக்காததும் 2018.01.01 ஆம் திகதி திரைசேரி தொழிற்பாட்டு திணைக்களத்திற்கு அதுபற்றி அறிவிக்கப்பட்டுள்ளது. ஆயினும் 2017 ஆண்டின் உபகட்டுப்பணங்களாக வழங்கப்பட்டிருந்த 178,499.96 ரூபா தீர்க்கப்படாத கட்டுப்பண மீதித் தொகையிலிருந்து செலுத்தப்பட்டுள்ளதுடன் அது தொடர்பிலான பெறுமதி 2018.05.21 ஆம் திகதி சிறைச்சாலைகள் தொழிற்பாட்டுத் திணைக்களத்திற்கு கொடுத்துத் தீர்க்கப்பட்டுள்ளது.
அரசாங்க பகுப்பாய்வாளர் திணைக்களம் 233	1. நிலையான சொத்துக்கள் இடாப்பு நாளதுவரை பேணப்பட்டிருக்கவில்லை. தேசங்கள் பற்றிய இடாப்பு நாளதுவரை சீராக்கப்பட்டு பேணப்பட்டிருக்கவில்லை.	நிலையான சொத்துக்கள் இடாப்பு மற்றும் சேதங்கள் பற்றிய இடாப்பு நாளதுவரை சீராக்கப்பட்டுள்ளது.
	2. கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு குறைந்தபட்சம் 03 கூட்ட அமர்வுகளையாவது நடாத்தியிருக்கவில்லை.	பகுப்பாய்வாளர் திணைக்களத்தில் உள்ளகக் கணக்காய்வு பிரிவு இல்லாததுடன் அப்பதவிக்காக அலுவலர் ஒருவரை உள்ளீர்ப்புச் செய்யுமாறு MPUBAD/ASSD/11 ஆம் இலக்க 2017.01.26 ஆம் திகதிய கடிதம் மூலம் பொதுநிருவாக முகாமைத்துவ அமைச்சினால் அறிவிக்கப்பட்டிருப்பினும் இதுவரையில் அலுவலரொவர் உள்ளீர்ப்புச் செய்யப்படவில்லை. ஆகவே நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சினால் நடாத்தப்படுகின்ற கணக்காய்வு மற்றம் முகாமைத்துவ குழுக் கூட்டங்களில் பங்குபற்றுகின்றனர்.
	3. மீளாய்வு ஆண்டிற்காக உரிய திகதியில் மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டு தொடர்புடைய அறிக்கைகள் கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு சமர்பிக்கப்பட்டிருக்கவில்லை. வருடாந்த மதிப்பீட்டிலிருந்து தெரியவந்துள்ள மேன்மிகைகள் குறைபாடுகள் பற்றிய விதப்புரைகளும் ஏனைய விதப்புரைகளும் உரிய காலகட்டத்திற்குள் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.	2017 ஆண்டு தொடர்பான மதிப்பீடு மேற்கொள்ளப்படுவதற்கு தொடர்புடைய அறிக்கைகள் 2018.03.13 ஆம் திகதி கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு சமர்பிக்கப்பட்டுள்ளதுடன் 2018.12.07 திகதி ஏலம் நடாத்தப்பட்டு சகல விதப்புரைகளும் முடிவுறுத்தப்பட்டுள்ளன.

	4. தொகு வாகனங்களுக்காக நாளாந்த ஓட்டல் குறிப்பு மற்றும் மாதாந்த பொழிப்பு அறிக்கைகள் கணக்காயவாளர் தலைமையதிபதிக்கு சமர்பிக்கப்பட்டிருக்கவில்லை. எல்லா வாகனங்களுக்காகவும் லொக் புத்தகங்கள் நாளதுவரை அடிப்படையில் பேணப்பட்டிருக்கவில்லை.	நாளாந்த ஓட்டல் குறிப்பு மற்றும் மாதாந்த பொழிப்பு அறிக்கைகள் தயாரித்து முடிவுறுத்தப்பட்டுள்ளதுடன் இம்மாதத்திற்குள் கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு சமர்பிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுமென்பதுடன் வாகனங்களின் லொக் புத்தகங்கள் நாளதுவரை சீராக்கப்பட்டுள்ளன.
	5. வங்கி இணக்கக் கூற்றுக்களிலிருந்து தெரியவந்துள்ள சீராக்கப்பட வேண்டிய மீதிகள் தொடர்பாக நி.பி. பிரகாரம் ஒரு மாதத்திற்குள் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.	வங்கி இணக்க கூற்றுக்களிலிருந்து தெரியவந்துள்ள சீராக்கப்பட வேண்டியிருந்த மீதிகள் சம்பந்தமாக நி.பி. பிரகாரம் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு தற்போது அனைத்தும் தீர்த்து சீர்செய்யப்பட்டுளளன.
	6. அங்கீகரிக்கப்பட்ட எல்லைகள் விஞ்சப்பட்டு கடப்பாடுகள் ஏற்படுத்திக் கொண்டிருந்தன	நி.பி. 94(11) ஏற்பாடுகளின்படி மீண்டுவரும் நிலையிலான செலவுகளுக்காக சென்ற 03 வருட காலத்தின் சாதாரணமாக 50% வீதமான வரவுகளுக்கு வரக்கூடிய சாத்தியம் இருந்தது. எவ்வாறாயினும் திறைசேரியிலிருந்து உரியவாறு கட்டுப்பணங்கள் கிடைக்காத காரணமாக முன்னைய ஆண்டுகளில் செலுத்த முடியாதிருந்த பட்டியல்களுக்காக மீளாண்டு ஆண்டின் ஏற்பாடுகளை பயன்படுத்திக் கொண்டு செலுத்துதல் செய்ய வேண்டியேற்பட்டது ஆகவே நடப்பாண்டில் மதிப்பீடு செய்யப்பட்ட செலவுகள் தொடர்பாக வவுச்சர்களை கடப்பாடு களாக எடுத்துக்காட்ட வேண்டியுள்ளது.
	7. ஒருவருடத்திற்கு மேலாக நிலவுகின்ற கடன் மீதிகள் இருந்தன	வேலைத் தடைக்குட்படுத்தப்பட்டிருக்கின்ற திருமதி. டபிள்யூ.எஸ்.கே. பெரேரா தொடர்பானதுடன் இவ்வாறு வழகக்குகெதிராக செயற்படும் வழக்கு நடவடிக்கை முடியும் வரை அறவீடு செய்து கொள்ள அல்லது அறவீடு செய்வது சம்பந்தமான தீர்மானமொன்றை எடுக்க முடியாதுள்ளது.
	8. மீளாய்வு ஆண்டிற்காக பாராளுமன்றத்திற்கு சமர்பிக்கப்பட வேண்டிய செயலாற்று அறிக்கை உரிய தினத்தில் சமர்பிக்கப்பட்டிருக்கவில்லை	2017 ஆம் ஆண்டிற்குரிய செயலாற்று அறிக்கை 2019.06.09 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்பிக்கப்பட்டுள்ளன.

உயர் நீதிமன்ற பதிவாளர் திணைக்களம் 234	1. கணனி உதிரிப்பாகங்கள் மற்றும் மென்கலங்கள் பற்றிய நிலையான சொத்துக்கள் இடாப்பொன்று நாளதுவரையில் பேணப்படவில்லை.	கணனி உதிரிப்பாகங்கள் மற்றும் மென்கலங்கள் பற்றிய நிலையான சொத்துக்கள் இடாப்பொன்று 2017 ஆம் ஆண்டில் நாளதுவரையாக்கப்படாதிருப்பினும் கணனி உதிரிப் பாகங்கள் மென்கலங்கள் பற்றிய சகல விபரங்கள் அடங்கிய பொருட் பதிவேடொன்று பேணப்பட்டுள்ளது. 2018 ஆம் ஆண்டிலிருந்து கணனி உதிரிப்பாகங்கள் மற்றும் மென்கலங்கள் பற்றிய நிலையான சொத்துக்கள் இடாப்பு நாளதுவரையாக்கப்பட்டு உரியவாறு பேணப்படுகிறது.
	2. கணக்காய்வாளர் தலைமையதிபதியினால் சமர்பிக்கப்பட்டிருந்த சகல கணக்காய்வு விசாரணைகளுக்காகவும் ஒரு மாதத்திற்குள் பதிலளிக்கப்படாமை	2017.07.20 மற்றும் 2017.07.11 ஆம் திகதிய கணக்காய்வு விசாரணை உயர் நீதிமன்ற பதிவாளர் திணைக்களத்திற்கு முறையே 2017.07.28 மற்றும் 2017.08.02 ஆம் திகதிகளில் கிடைத்துள்ளதுடன் அதற்கான பதில்கள் முறையே 2017.07.31 மற்றும் 2017.08.02 ஆம் திகதிகளில் பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளன.
	3. கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு குறைந்த பட்சம் 03 கூட்ட அமர்வுகளையாவது நடாத்தியிருக்கவில்லை.	கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டம் நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சினால் ஒழுங்கு செய்யப்படுவதுடன் அவ்வனைத்து கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ கூட்டங்களிலும் கலந்து கொள்ளப்பட்டன.
	4. மீளாண்டு ஆண்டிற்காக உரிய திகதியில் மதிப்பீடு செய்யப்பட்டு தொடர்புடைய அறிக்கைகள் கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு சமர்பிக்கப்பட்டிருக்கவில்லை. வருடாந்த மதிப்பீட்டிருலிருந்து தெரிய வந்துள்ள மேன்மிகை, குறைபாடுகள் பற்றிய விதப்புரைகளும் ஏனைய விதப்புரைகளும் உரிய காலத்திற்குள் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.	மீளாய்வு ஆண்டிற்கான மதிப்பீடு உரிய திகதியில் நடாத்தப்பட்டுள்ளதுடன் அவ்வறிக்கைகள் 2018.03.27 ஆம் திகதி கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு சமர்பிக்கப்பட்டுள்ளது. வருடாந்த மதிப்பீட்டின் மூலம் தெரியவந்துள்ள மேன்மிகை மற்றும் குறைபாடுகள் பற்றிய விதப்புரைகளும் ஏனைய விதப்புரைகளும் 2018 ஆம் ஆண்டிற்குள் செயற்படுத்தப்பட்டு கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு அறிக்கையிடப்பட்டுள்ளன.

	5. தொகுதி வாகனங்களுக்காக ஓட்டல் குறிப்புக்கள் மற்றும் மாதாந்த பொழிப்பு அறிக்கைகள் கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு சமர்பிக்கப்பட்டிக்கவிலலை. சுகல வாகனங்களுக்காகவும் லொக் புத்தகங்கள் நாளதுவரை அடிப்படையின் மீது பேணப்பட்டிருக்கவில்லை.	எதிர்காலத்தில் தொகுதி வாகனங்களுக்காக நாளாந்த ஓட்டல் குறிப்புக்கள் மற்றும் மாதாந்த பொழிப்பு அறிக்கைகள் தயாரிக்கப்பட்டு கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு சமர்ப்பிப்பதற்கும் வாகனங்களின் லொக் புத்தகங்களை நாளதுவரை சீராக்குவதற்கு நடவடிக்கையெடுக்குமாறும் தொடர்புடைய அலுவலர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.
	6. வங்கி இணக்கக் கூற்றுக்களிலிருந்து தெரியவந்துள்ள சீராக்கல் செய்ய வேண்டியிருந்த மீதிகள் தொடர்பாக நி.பி. பிரகாரம் மாதமொன்றுக்குள் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.	வங்கி இணக்கள் கூற்றுக்களிலிருந்து தெரியவந்துள்ள சீராக்கல் செய்ய முடியுமான சகல மீதிகள் சம்பந்தமாகவும் சீராக்கல்கள் செய்யப்பட்டுள்ளன ஆயினும் வங்கியிலிடப்படாத வைப்புக்களாக நிலவுகின்ற 48,978.00 ரூபாத் தொகை தொடர்பாக ஓழுக்காற்று விசாரணையொன்று நடைபெறுகின்றதுடன் அதன் விதப்புரைகள் கிடைக்கும் வரையில் தொடர்புடைய சீராக்கல்களை செய்வதற்கு முடியாதுள்ளது.
	7. அங்கீகரிக்கப்பட்ட எல்லைகள் விஞ்சப்பட்டு கடப்பாடுகள் ஏற்படுத்திக் கொள்ளப்பட்டிருந்தன	2017 ஆம் ஆண்டில் அங்கீகரிக்கப்பட்ட எல்லைகள் விஞ்சப்பட்டு கடப்பாடுகள் ஏற்படுத்திக் கொண்டிருந்ததுடன் 2019 ஆம் ஆண்டாகும் போது இந் நிலையை சீர்செய்வதற்கு அலுவலர்களுக்கு ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளன.
	8. அங்கீகரிக்கப்பட்ட எல்லை விஞ்சப்பட்டு பணியாளர் தொகுதி ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டிருந்தது.	உயர் நீதிமன்ற பதிவாளர் திணைக்களத்தினால் ஆட்சேர்ப்புக்கள் செய்யப்படாததுடன் நீதி அமைச்சு மற்றும் நீதிச் சேவைகள் ஆணைக்குழவினால் ஆட்சேர்ப்புக்கள் செய்யப்படுகிறது. 2017 ஆம் ஆண்டில் அங்கீகரிக்கப்பட்ட எல்லை விஞ்சப்பட்டிருந்த பணியாளர் தொகுதியை 2019 ஆம் ஆண்டில் சீர்செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. ஆயினும் குறித்த இடமாற்றங்கள் அமுல்படாததால் தற்போதைக்கும் பதிவாளர் II தரத்து அலுவலர்கள் மூவரின் மேன் மிகையொன்று நிழவுகிறது.

	9. பணியாளர்கள் தொகுதியின் அனைவருக்கும் எழுத்துமூலமான கடமை சாட்டுதல்கள் செய்யப்பட்டிருக்கவில்லை.	2018 ஆண்டிலிருந்து பணியாளர்கள் தொகுதியின் அனைவருக்கும் எழுத்துமூலமான கடமை சாட்டுதல்கள் வழங்கப்பட்டுள்ளன.
சட்ட ஆணைக்குழுத் திணைக்களம் 235	1. கிடைக்கப்பெறுகின்ற காசோலைகள் மற்றும் காசுக்கட்டளைகள் இடாப்பு நாளதுவரை சீராக்கப்பட்டு பேணப்பட்டிருக்கவில்லை.	கிடைக்கப்பெறுகின்ற காசோலைகள் மற்றும் காசுக்கட்டளை இடாப்புக்கள் நாளதுவரை சீராக்கப்பட்டு பேணிச் செல்வதற்காகன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.
	2. கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு குறைந்த பட்சம் 03 கூட்ட அமர்வுகளையாவது நடாத்தியிருக்கவில்லை	நீதி மற்றும் சிறைச்சாலைகள் அமைச்சினால் ஒழுங்கு செய்யப்பட்ட சகல கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் கூட்டங்களில் கலந்துகொள்ளப்பட்டன.
	3. வருடாந்த மதிப்பீட்டின் மூலம் தெரியவந்துள்ள மேன்மிகைகள் குறைபாடுகள் பற்றிய விதப்புரைகளும் ஏனைய விதப்புரைகளும் குறிப்பிட்ட காலகட்டத்திற்குள் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை	வருடாந்த மதிப்பீட்டிலிருந்து தெரியவந்துள்ள மேன்மிகைகள், குறைபாடுகள் பற்றிய விதப்புரைகளும் ஏனைய விதப்பரைகளும் உரிய காலகட்டத்திற்குள் செயற்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.
	4. அங்கீகரிக்கப்பட்ட எல்லைகள் விஞ்சப்பட்டு கடப்பாடுகள் ஏற்படுத்திக் கொள்ளப்பட்டிருந்தன	எதிர்காலத்தில் அங்கீகரிக்கப்பட்ட எல்லைகள் விஞ்சப்பட்டு கடப்பாடுகள் ஏற்படுத்திக் கொள்ளாதிருப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும்
	5. நிலுவைகளாகவிருந்த கடன் மீதிகளின் கால பகுப்பாய்வொன்றை தயாரித்திருக்கவில்லை ஓராண்டிற்கு மேற்பட்ட காலத்திலிருந்து நிலவிவருகின்ற நிலுவை கடன் மீதிகள் இருந்தன.	நிலுவைகளாகவிருந்த கடன் மீதிகளின் கால பகுப்பாய்வொன்றை தயாரிப்பதற்கு ஓராண்டிற்கு மேற்பட்ட காலமாக நிலவி வருகின்ற கடன் மீதிகள் இருக்கவில்லை.
பொது நன்னம்பிக்கை பொறுப்பாளர் திணைக்களம்	1. நிலையான சொத்துக்கள் இடாப்பு நாளதுவரை சீராக்கப்பட்டு பேணப்பட்டிருக்கவில்லை	நிலையான சொத்துக்கள் இடாப்பில் உள்ளடக்கப்பட வேண்டிய சகல தகவல்களும் தற்போதைக்கும் ஒன்று திரட்டப்பட்டிருப்பதுடன் அத் தகவல்களை அடிப்படையாகக் கொண்டு அவ்வாவணத்திற்கான தகவல்கள் உள்ளடக்குதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

	2. உள்ளக கணக்காய்வு விசாரணைக்காக மாதமொன்றுக்குள் விடையளிக்கப்படாத சந்தர்ப்பங்கள் அறிக்கையிடப்பட்டுள்ளன.	2018.12.31 ஆம் திகதியாகும் போது 2017 ஆம் ஆண்டு தொடர்பிலாக நடைபெற்ற சகல உள்ளக கணக்காய்வு விசாரணைகளுக்கு பதிலளிக்கப்பட்டுள்ளதுடன் மாதமொன்றுக்குள் உள்ளக கணக்காய்வு விசாரணைகளுகு பதிலளிப்பதற்காக தொடர்புடைய அலுவலர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.
	3. கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு குறைந்த பட்சம் 03 கூட்ட அமர்வுகளையாவது நடாத்தியிருக்கவில்லை.	2018 ஆண்டில் பின்வருமாறு கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டம் நடாத்தப்பட்டுள்ளது. **காலண்டு** **கூட்டம் நடைபெற்ற திகதி** 01 காலாண்டு 2018.05.15 01 காலாண்டு 2018.10.01 01 காலண்டு 2018.12.14
	4. மீளாண்டு ஆண்டிற்காக உரிய திகதியில் மதிப்பீடு செய்யப்பட்டு தொடர்புடைய அறிக்கைகள் கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு சமர்பிக்கப்பட்டிருக்கவில்லை. வருடாந்த மதிப்பீட்டிருலிருந்து தெரிய வந்துள்ள மேலதிக, குறைபாடுகள் பற்றிய விதப்புரைகளும் ஏனைய விதப்புரைகளும் உரிய காலத்திற்குள் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.	2017 ஆண்டிற்குள் மதிப்பீட்டுச் சபையின் நடவடிக்கைகளை உரிய திகதியில் நடாத்தப்படாதிருப்பினும் அவ்வாண்டு தொடர்பிலான மதிப்பீட்டு நடவடிக்கைகள் முடிவுறுத்தப்பட்டு 2018 அக்டோபர் மாதம் 08 ஆம் திகதி கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு அறிக்கையிடப்பட்டுள்ளது. அம் மதிப்பீடு தொடர்பிலான 2018.12.14 ஆம் திகதியாகும் போது விதப்புரைகள் செயற்படுத்தப்பட்டு முடிவுறுத்தப்பட்டுள்ளன. அவ்வாறே 2018 ஆம் ஆண்டிற்காக மதிப்பீடு செய்யப்பட்டு 2019.05.31 ஆம் திகதி தொடர்பிலான அறிக்கைகள் கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு சமர்பிக்கப்பட்டுள்ளன.
சமுதாயஞ் சார் சீர்திருத்த திணைக்களம்	1. ஒதுக்கீட்டுக் கணக்கு உரிய திகதியில் சமர்பிக்கப்படவில்லை.	2017 ஆண்டு தொடர்பிலான ஒதுக்கீட்டுக் கணக்கு உரிய திகதியில் சமர்பிக்க முடியாதிருந்ததுடன் அதை 2018.04.05 திகதி சமர்பிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. 2018 ஆம் ஆண்டு தொடர்பிலான நிதி கூற்றுக்கள் உரிய திகதிக்கு முன்னர் சமர்பிக்கப்பட்டுள்ளன.

	2. அரசாங்க அலுவலர்களின் முற்பண கணக்கு உரிய திகதியில் சமர்பிக்கப்படவில்லை	2017 ஆண்டு தொடர்பிலான முற்பண பி கணக்கு உரிய திகதிக்கு சமர்பிக்க முடியாது போனதுடன் அதை 2018.07.25 ஆம் திகதி சமர்பிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. மேலும் 2018 ஆண்டு தொடர்பிலான முற்பண பி கணக்கு உரிய திகதிக்கு முன்னர் சமர்பிக்கப்பட்டுள்ளன.
	3. நிலையான சொத்துக்கள் இடாப்பு நாளதுவரை பேணப்பட்டிருக்கவில்லை. பொருட்பதிவேடு நாளதுவரை பேணப்படவில்லை. சேதங்கள் பற்றிய இடாப்பு நாளதுவரை பேணப்படவில்லை	2017.12.31 திகதியின நிலையான சொத்துக்கள் இடாப்பு பொருட்பதிவேடு மற்றும் சேதங்கள் பற்றிய இடாப்பு நாளதுவரை செய்து முடிவுறுத்துவதற்கு முடியாதிருந்ததுடன் தற்போதைக்கு அச்சகல இடாப்புக்களும் நாளதுவரை சீராக்கப்பட்டுள்ளன. மேலும் எதிர்காலத்தில் இவ்விடாப்பு நாளதுவரை சீராக்கப்பட்டு பேணுவதற்கு தொடர்புடைய அலுவலர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.
	4. கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் குறைந்தபட்சம் 03 தடவைகளாவது கூட்டங்கள் நடாத்தியிருக்கவில்லை	கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சினால் ஒழுங்கு செய்யப்படுவதுடன் அக்கூட்டங்களில் பங்குபற்றியுள்ளனர்.
	5. வருடாந்த மதிப்பீட்டிலிருந்து தெரியவந்துள்ள மேன்மிகைகள் குறைபாடுகள் பற்றிய விதப்புரைகளும் ஏனைய விதப்புரைகளும் உரிய காலகட்டத்திற்குள் செயற்படுத்தபபட்டிருக்கவில்லை.	எதிர்காலத்தில் வருடாந்த மதிப்பீட்டிலிருந்து தெரியவந்துள்ள மேன்மிகைகள் மற்றும் குறைபாடுகள் பற்றிய விதப்புரைகள் உரிய காலகட்டத்திற்குள் செயற்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்குமாறு தொடர்புடைய அலுவலர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.
	6. தொகுதி வாகனங்களுக்கான நாளாந்த ஓட்டக் குறிப்பு மற்றும் மாதாந்த பொழிப்பு அறிக்கைகள் கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு சமர்பிக்கப்பட்டிருக்கவில்லை சகல வாகனங்களுக்காகவும் லொக் புத்தகங்கள் நாளதுவரை சீராக்கல் அடிப்படையில் பேணப்பட்டிருக்கவில்லை.	தொகுதி வாகனங்களுக்காக 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளுக்கு தொடர்புடையதான நாளாந்த ஓட்டக் குறிப்புக்கள் மற்றும் மாதாந்த பொழிப்பு அறிக்கைகள் தற்போதைக்கும் கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு, சமர்பிக்கப்பட்டுள்ளதுடன் வாகனங்கள் தொடர்பிலான லொக் புத்தகங்கள் தற்போதைக்கும் நாளதுவரை சிராக்கப்பட்டுள்ளன.

	7. ஓராண்டுக் காலத்திற்கு மேலாக நிலவுகின்ற நிலுவை கடன் மீதிகள் இருந்தன	ஓராண்டு மேற்பட்ட காலமாக நிலவிய நிலுவை மீதிகளுக்கிடையே ஒரு அலுவலரின் கடன் மீதி தவனைகளாக தற்போதைக்கும் பிணைக்காரர்களிடமிருந்து அறவிடப்படுவதுடன் அவ்வலுவலர் தொடர்பாக மேலும் அறவிடப்பட வேண்டிய மீதி 24,646 ரூபாவாகும் மேலும் பணித்தடை செய்யப்பட்டுள்ள வேலை பரிசோதகர் திரு.ஜே.ஜீ.பீ.சீ. வீரசிங்க தொடர்பான ஒழுக்காற்று விசாரணை நடவடிக்கைகள் தொடர்ந்தும் செயல்படுவதால் அப்பரிசோதனை நடவடிக்கைகள் முடிவுறும் வரை கடன் நிலுவைகளை அறவீடு செய்து கொள்வதற்காக எதிர் நடவடிக்கை எடுக்க முடியாதுள்ளது.
	8. மீளாய்வு ஆண்டிற்காக பாராளுமன்றத்திற்கு சமர்பிக்கப்பட வேண்டிய செயலாற்று அறிக்கை உரிய தினத்தில் சமர்பிக்கப்பட்டிருக்கவில்லை	2017 ஆம் ஆண்டின் செயலாற்று அறிக்கை குறித்த திகதிக்கு பாராளுமன்றத்தில் சமர்பிக்க முடியாதிரப்பினும் 2018 ஆம் ஆண்டில் உரிய திகதியில் செயலாற்று அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்பிக்கப்பட்டுள்ளன.
கடன் இணக்க சபைகள் திணைக்களம் 231	1. நிலையான சொத்துக்கள் இடாப்பு நாளதுவரை பேணப்பட்டிருக்கவில்லை	2017 ஆம் ஆண்டின் நிலையான சொத்துக்கள் இடாப்பு நாளதுவரை பேணப்படாததுடன் 2018 அண்டிலிரந்து அதை உரியவாறு நாளதுவரையில் சீர்செய்து பேணிச் செல்லப்படுகிறது.
	2. வருடாந்த செயற்திட்டம் தயார் செய்யப்பட்டிருக்கவில்லை	2014.02.17ஆம் திகதிய 01/2014 ஆம் இலக்க சுற்றறிக்கைக்கு அமைவாக 2019 ஆம் ஆண்டிற்கான செயற்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.
	3. கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு குறைந்த பட்சம் 03 கூட்ட அமர்வுகளையாவது நடாத்தியிருக்கவில்லை.	இத் திணைக்களத்தின் மூலம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டங்கள் நடாத்தபடாததுடன் நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சினால் நடாத்தப்படுகின்ற சகல கணக்காய்வு மற்றும் முகாமைதத்துவ குழுக் கூட்டங்களிலும் பங்குபற்றியுள்ளன.

	4. வருடாந்த மதிப்பீட்டிலிருந்து தெரியவந்துள்ள மேன்மிகைகள் குறைபாடுகள் பற்றிய விதப்புரைகளும் ஏனைய விதப்புரைகளும் உரிய காலகட்டத்திற்குள் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.	2018 ஆம் ஆண்டிற்கான மதிப்பீடு செய்யப்பட்டுள்ளதுடன் அது தொடர்பான விதப்புரைகள் செயற்படுத்திக் கொண்டிக்கின்றன.
	5. தொகுதி வாகனங்களுக்காக ஓட்டல் குறிப்புக்கள் மற்றும் மாதாந்த பொழிப்பு அறிக்கைகள் கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு சமர்பிக்கப்பட்டிக்கவிலலை. சுகல வாகனங்களுக்காகவும் லொக் புத்தகங்கள் நாளதுவரை அடிப்படையின் மீது பேணப்பட்டிருக்கவில்லை.	எதிர்காலத்தில் தொகுதி வாகனங்களுக்காக ஓட்டக் குறிப்புக்கள் மற்றும் மாதாந்த பொழிப்பு அறிக்கைகள் தயாரிக்கப்பட்டு கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு சமர்பிப்பதற்கும் வாகனங்களின் லொக் புத்தகங்களை நாளதுவரை சீராக்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்குமாறும் தொடர்புடைய அலுவலர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.
	6. அங்கீகரிக்கப்பட்ட எல்லைகள் விஞ்சப்பட்டு கடப்பாடுகள் ஏற்படுத்திக் கொண்டிருந்தன	எதிர்காலத்தில் அவ்வாறான சந்தர்ப்பங்கள் ஏற்படாதிருப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும்.